கழகத்திலும் – அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்

நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டவர் மிசா. இராமநாதன்!

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூன் 19 –

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

தலைமைக் கழகத் தீர்மானக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மிசா இராமநாதன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

அறந்தாங்கியைச் சேர்ந்த திரு. இராமநாதன் அவர்கள் பள்ளிப் பருவம் முதலே கழகப் பற்றாளராக விளங்கி, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படிக்கும் போதே மாணவர்களைத் திரட்டி மாணவர் தி.மு.கழகச் செயலாளராகப் பணியாற்றியவர் ஆவார். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவ்வளாகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை நிறுவியதில் முக்கியப் பங்கு வகித்தவர் திரு. இராமநாதன் அவர்கள்.

1974ஆம் ஆண்டு ஆவுடையார்கோயில் ஒன்றியச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து 5 முறை பொறுப்பு வகித்த சிறப்புக்குரியவர். பூவலூர் ஊராட்சி மன்ற உறுப்பினராக 13 ஆண்டுகள் இருந்துள்ளார். செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் குழு உறுப்பினர் எனக் கழகத்திலும் அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு திருச்சி மத்தியச் சிறையில் ஓராண்டுகாலம் தண்டனை அனுபவித்து 'மிசா இராமநாதன்' எனப் பெயர் பெற்ற தீரர். இவர் சிறைக்கைதி யாக இருந்த காலத்தில் இவரது இல்லத்துக்குச் சென்று தலைவர் கலைஞர் அவர்கள் மதிய உணவு உட்கொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தது குறிப்பிடத்தக்க நிகழ்வு.

இத்தகைய நீண்டகாலப் பொது வாழ்வுக்குச் சொந்தக்காரரான திரு. மிசா இராமநாதன் அவர்களின் பணிகளைப் பாராட்டி கடந்த ஆண்டு சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கழக பவள விழா நிறைவு முப்பெரும் விழாவில் பேரறிஞர் அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்திருந்ததை இப்போது நினைவுகூர்கிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர் –

கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் மிசா ராமநாதன்!

பொதுச் செயலாளர் – நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் இரங்கல்!

சென்னை, ஜூன் 19–

"எந்தப் பதவிக்கும் ஆசைப்படாமல், கட்சித் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர் மறைந்த மிசா ராமநாதன்" என்று அவரது மறைவுக்கு கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:

எனது ஆருயிர் நண்பன் மிசா ராமநாதன் அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியையும் கட்டுக்கடங்காத துயரத்தையும் தந்தது!

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பி.ஏ. முடித்த பின்னர், சட்டக்கல்லூரியில் எங்களுடன் பி.எல். படித்தார்.

படித்த காலம் தொட்டே கட்சியின் முழு நேர ஊழியனைப் போல் கழகத்திற்காக அயராது பாடுபட்டவர்!

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர்!

கட்சியின் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர்!

அவரது அருமை பெருமைகளை உணர்ந்த கழகத் தலைவர் அவர்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் அவருக்கு அறிஞர் அண்ணா விருது தந்து கவுரவித்தார்!

ராமநாதன் மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

என் நெஞ்சிருக்கிறவரையில் அந்த நண்பனின் நினைவிருக்கும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'மா' தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது!

எதிர்க்கட்சிகளின் போராட்டம் தேவையற்றது!

வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை!

சென்னை, ஜூன். 19-

'மா' தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்ட நிலையில் எதிர்காட்சிகளின் போராட்டம் தேவையற்றது என்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

விவசாயிகளின் நலனை காக்க திராவிட மாடல் அரசு 2021 மே மாதம் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும், வேளாண்மைத் துறை என்பதை வேளாண்மை - உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, எண்ணிலடங்காத திட்டங்களின் மூலம் விவசாயிகளின் நலன் காக்கப்பட்டு வருகிறது. முந்தைய அதிமுக அரசானது, ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களை ஆதரித்தது போன்ற பல்வேறு உழவர் விரோத நடவடிக்கையினால் அப்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது விவசாயிகள் அனைவரும் எந்தவித போராட்டமுமின்றி மகிழ்ச்சியில் உள்ள நிலையினை பொறுக்கமுடியாத ஆதங்கத்தில் "அன்றாட அறிக்கை திலகம்" எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டு மக்களை தினந்தோறும் குழப்பி வருகிறார்.

அன்றாடம் அறிக்கைப் போர் நடத்தும் எதிர்கட்சித் தலைவர் இன்றைய தினம் மா விவசாயிகளின் மீது அக்கறை உள்ளது போல் நடித்து அறிக்கை விட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் அதிக அளவு பயிரிடப்படும் பழப்பயிரான "மா" கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி போன்ற மாவட்டங்களின் பெரும்பாலான விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இவற்றில் பெங்களூரா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், நீலம், செந்தூரா, அல்போன்சா, ருமானி போன்ற இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

நடப்பாண்டில், பருவ நிலை மா உற்பத்திக்கு பெரிதும் உகந்ததாக அமைந்ததால் சராசரி மகசூலான எக்டருக்கு 5 முதல் 6 மெட்ரிக் டன் என்பது எட்டு மெட்ரிக் டன்னுக்கும் மேலாக அதிகரித்து, சந்தையில் வரத்து அதிகரித்தது. இந்த நிலையில், மாம்பழக்கூழ் உற்பத்திக்கென்றே பெருமளவு பயன்படுத்தப்படும் பெங்களூரா இரக மாம்பழம் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கம் அடைந்த சூழல் நிலவியதாக அறிய வந்த உடனேயே கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நியாயமான விலையில் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப்பட்டனர்.

இரண்டுகட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும், கொள்முதல் செய்யப்படாத நிலையில், மாநில அளவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், மா பதப்படுத்தும் நிறுவனங்களுடன் 16.06.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மா உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன் கருதி மா பதப்படுத்தும் நிறுவனங்கள் மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடன் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூரா இரகத்தினை நியாயமான விலையில் உடனடியாக உழவர்களிடமிருந்து "மா" பதப்படுத்தும் நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு, மாம்பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்து மாம்பழக்கூழ் உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டு அனைத்து மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களும் பெங்களூரா இரக மாங்கனிகளை கொள்முதல் செய்து வருகின்றனர். விவசாயிகளும் தங்களது மாங்கனிகளை இந்நிறுவனங்களிடம் மாம்பழக்கூழ் தயாரிக்க உரிய விலையில் அளித்து வருகின்றனர். மாங்கனிக்கான விலையும் படிப்படியாக கூடிய விரைவில் அதிகரிக்கும். மாங்கனிகள் கொள்முதல் ஆகஸ்டு மாதம் இரண்டாம் வாரம் வரை நடைபெறும். எனவே, "மா" விவசாயிகளுக்கு லாபம் கிடைத்திட இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

"மா" தொடர்பான பிரச்சனை முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், இப்பிரச்சனையைப் பெரிதாக்கி அரசியல் செய்ய முயற்சித்த எதிர்க்கட்சிகள், அரசின் முயற்சியால் விவசாயிகள் "மா" விற்பனை செய்வதைப் பொறுக்க முடியாமல் போராட்டம் நடத்துவதாகக் கிளம்பியுள்ளது தேவையற்ற ஒன்று. எனவே, தமிழ்நாட்டு மக்களின் கவனச்சிதறல்கள் ஏதுமில்லாமல் திராவிட மாடல் அரசுக்கு நாள்தோறும் விவசாயிகளின் ஆதரவு பெருகி வருவது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

வ. எண்	நாள்	ஒன்றியம் / நகரம் பேரூர்	இடம்	பேச்சாளர்கள்
1	21.06.2025	திருத்தணி வடக்கு ஒன்றியம்	என்.என்.கண்டிகை	சிவாஜி கிருஷ்ணமூர்த்தி கா.ராஜராஜேஸ்வரி
2	22.06.2025	பூண்டி மேற்கு ஒன்றியம்	பூண்டி	சிவாஜி கிருஷ்ணமூர்த்தி
3	23.06.2025	இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம்	தாமனேரி	குடியாத்தம் புவியரசி மா.பூபதி
4	24.06.2025	பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம்	வெளியகரம்	நெல்லிகுப்பம் புகழேந்தி
5		பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம்	கர்லம்பாக்கம்	க.ரா.சந்தியா
6		பொதட்டூர்பேட்டை பேரூர்	பேருந்து நிலையம் அருகில்	தருமபுரி அதியமான்
7	26.06.2025	இரா.கி.பேட்டை தெற்கு ஒன்றியம்	சாணூர் மல்லாவரம்	காவேரிப்பட்டணம் இளையராஜா
8	27.06.2025	பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம்	நொச்சிலி	சேலம் சுஜாதா
9	28.06.2025	திருத்தணி கிழக்கு ஒன்றியம்	வேலஞ்சேரி	சேலம் சுஜாதா விக்னேஷ் உதயன்
10	29.06.2025	இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம்	வங்கனூர்	ஸ்ரீராம்
11		பள்ளிப்பட்டு பேரூர்	சந்தைப்பேட்டை	க.ஷேவிதா
12	30.06.2025	திருத்தணி மேற்கு ஒன்றியம்	புச்சிரெட்டிப்பள்ளி	ஆரணி மாலா
13		திருத்தணி தெற்கு ஒன்றியம்	எஸ்.அக்ராஹரம்	அப்துல்ரகுமான் பாரி
14	01.07.2025	இரா.கி.பேட்டை வடக்கு ஒன்றியம்	பாலாபுரம்	தமிழ்சாதிக்
15	02.07.2025	கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம்	பேரம்பாக்கம்	எழும்பூர் கோபி ஜெ.பாலசந்தர்
16		திருவள்ளூர் நகரம்	மீரா திரையரங்கம் அருகில்	தமிழ்சாதிக்
17	03.07.2025	திருத்தணி நகரம்	நேரு நகர்	முரசொலி மூர்த்தி
18	04.07.2025	திருவாலங்காடு மேற்கு ஒன்றியம்	சீதாபுரம்	வரகூர் காமராஜ் மா.பூபதி
19	05.07.2025	கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம்	விடையூர்	வண்ணை புகாரி ஐஸ்வர்யா
20	06.07.2025	திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம்	ராமலிங்கபுரம்	பழ.ராஜேந்திர பிரசாத்

திருவள்ளூர்

நாள் : 18-06-2025

சென்னை தெற்கு மாவட்ட அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (19.06.2025 - வியாழக்கிழமை) பகல் 11 மணிக்கு, பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: உறுப்பினர் சேர்க்கை மற்றும் கழக ஆக்க பணிகள்

அமைச்சர் **மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
14	மே.பொ./இ- 2/வ.செ.அ.மி.நி - 2	NCTPS II M II Circle AHP FAHS Routine Maintenance of 60 MT weigh bridge Mechanical Elect
32	மே.பொ./இ- I/வ.செ.அ.மி.நி - 1	Renewal of condenser inlet cooling water 1600 NB spool pipes in debris filter system in Unit II
40	மே.பொ./இ- I/வ.செ.அ.மி.நி - 2	NCTPS II MI Circle BM Division Unit II Boiler APH 2B Replacement of the existing wornout Hot End
42	மே.பொ./இ- II/வ.செ.அ.மி.நி - 1	NCTPS I SE M II Circle ICHS Dn Replacement damaged Technological Structure conveyor 9
43	மே.பொ./இ- II/வ.செ.அ.மி.நி - 1	NCTPS I SE M II Circle ICHS Dn Replacement damaged Technological Structure conveyor 7
52	மே.பொ./இ- I/வ.செ.அ.மி.நி - 2	NCTPS II MI Circle BM Unit II Replacement of defective Boiler pressure parts tubes and bends
54	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 2	Flexible Coupling Assembly for Vertical Type CWP in Unit I and II of Cooling Water Pump House
57	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 2	Brushable ceramic epoxy material
64	மே.பொ./இ- I/வ.செ.அ.மி.நி - 2	NCTPS II MI Circle BM Division Unit II Boiler APH 2A Replacement of the existing wornout Hot End H
73	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Various spares for Emulsifier system
74	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Dynavane filter cell assembly for HP803 Bowl mills
76	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Titanium channel plate with Nitrile rubber gaskets for M30 Model Plate Heat Exchanger 1C in Unit-I
78	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Guide pipe and Diffuser assembly for oil gun and Fuel oil Gun removal part JX Assembly
80	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Titanium channel plate with Nitrile rubber gaskets for M30 Model Plate Heat Exchanger 1A in Unit-I
82	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Titanium channel plate with Nitrile rubber gaskets for M30 Model Plate Heat Exchanger 1B in Unit-I
83	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Various sizes of Variable Load Hanger Supports for condenser outlet pipes and prime pump lines
85	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Safety guard for BCN 40 A B
86	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Travelling Water Screen Basket Assembly of CWPs
87	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Alkali storage tank
88	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Air port Ring Assembly for HP803 Bowl mills
89	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Upper Journal bearing housing for HP803 Bowl mills
90	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Hot air gate assembly for Mill hot air duct with pneumatic power cylinder
91	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Hot air gate assembly for Mill hot air duct with pneumatic power cylinder and Bulb seal assembly
92	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Coal valve for coal bunker of HP803 Bowl Mills
94	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Rotating assembly for sea water booster Pumps
93	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 1	Coal valve for coal bunker of HP803 Bowl Mills
95	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Roller Journal assembly in assembled condition without grinding rollers for HP803 Bowl mills
96	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Thrust collar for bearing assembly of CWPs
97	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Pipe bottom support for cooling water pumps
98	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Knife edge gate valve with tramp Iron spout Assembly for HP803 Bowl mills
99	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Deluge Valve Complete assembly
100	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Titanium channel plate with Nitrile rubber gaskets for M30 Model Plate Heat Exchanger 2A in Unit-II
103	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி- 1	Support Bearing Housing Assembly Complete set

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/3123/ஒப்பந்தப்புள்ளி/2025

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு 2 விருது!

புதுடெல்லியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மை மாநாடு 2025-இல் பாலின சமத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவுகளில் சிறந்த சாதனைகளுக்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு, கிரீன்டெக் அறக்கட்டளையால் இரண்டு மதிப்புமிக்க உலகளாவிய விருதுகள் (சுற்றுச்சூழல்பாதுகாப்பிற்காக – சுற்றுச்சூழல் விருது மற்றும் பாலின சமத்துவத்திற்காக – நிலைத்தன்மை விருது) வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
HE - 2502 / 2025-26	தலைமைப் பொறியாளர் / புனல்	ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் உள்ள பல்வேறு நீர் மின் நிலையங்களுக்கு 220V, 110A திறன் கொண்ட பேட்டரி சார்ஜர்கள் 6 எண்ணம் (6 Nos) வழங்குவதற்கு E-டெண்டர்

ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான படிவம் பதிவிறக்கம் செய்ய இணையதள முகவரிகள் : https://tntenders.gov.in/nicgep/app, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/3130/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் – 4, பகுதி – 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

2025- ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேயர்

செ.ம.தொ.இ / 633 / வரைகலை / 2025

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
C.929/2024-25	த.பொ. / காஞ்சிபுரம்	Laying of 11KV 3x300 UG cable for erection of new 11 KV Vengambakkam Feeder fed from Madanbakkam

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/3127/ஒப்பந்தப்புள்ளி/2025